**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை:திருமதி.அ.தாவூத்அம்மாள், பி.எ., எம்.எல்.,**
சார்பு நீதிபதி, ஆரணி

2024-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ம் நாள் வெள்ளிக்கிழமை

**இந்து திருமண அசல் மனு எண்.132/2022**
**TNTM03000749/2022**

கார்த்திகேயன் ... மனுதாரர்

...எதிர்...

கல்பனா (எ) ஹேமலதா ... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 29.01.2024 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.M.வினாயகம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையின்மையாலும், எதிருரை ஏதும் தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரருக்கெதிராக 04.07.2023 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், மனுதாரர் தரப்பில் ஆற்றிய வாதுரைகளைக் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 17.02.2016 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்யக்கோரி, இந்து திருமணச் சட்டம் பிரிவு 13(1) (ia)-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A DAOUDHAMMAL
Digitally signed by A DAOUDHAMMAL
Date: 2024.03.01 14:38:45 +0530

**சார்பு நீதிபதி, ஆரணி.**

## 2. மனுவின் சுருக்கம்

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இந்து சம்பிரதாய சாஸ்திர முறைப்படி இருவீட்டு பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் கடந்த 17.02.2016 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அத்திமலைப்பட்டு மதுரா மேட்டுகுடிசை கிராமத்தில் உள்ள சி.எம். வளர்மதி திருமண மண்டபத்தில் இந்து சம்பிரதாய முறைப்படி திருமணம் நடைப்பெற்றது. மேற்படி திருமணம் நடந்த பின்னர் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரும் நல்ல முறையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். மேலும் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் குடும்ப இல்லற வாழ்க்கையின் காரணமாக 29.11.2016 அன்று நிதிக்ஷா என்ற பெண் குழந்தையும், 09.08.2018 அன்று அனுஸ்ரீ என்ற பெண் குழந்தையும் பிறந்துள்ளார்கள். மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் நல்ல முறையில் பார்த்துக்கொண்டு அவர்களுக்கு தேவையான அனைத்து பணிவிடைகளை செய்து கொண்டு நல்ல முறையில் கவனித்து வந்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொண்டு மனுதாரரிடம் தேவையில்லாமல் சண்டை போட்டு கொண்டு வந்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர் சட்டப்படியான கணவர் ஆன மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களை சரிவர மதிக்காமல் இருந்து வந்துள்ளார். மேலும் குடும்ப வாழ்க்கையின் மீதும் மனுதாரர் மீதும் அடிக்கடி சந்தேகம் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். இருப்பினும் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது இருந்த அன்பாலும் பாசத்தாலும் எதிர்மனுதாரரையும், குழந்தைகளையும் நல்லமுறையில் கவனித்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 23.11.2021 அன்று எதிர்மனுதாரர் எந்தவித காரணமும் இன்றி மனுதாரரிடம் தேவையில்லாமல் சண்டை போட்டு விட்டு இரண்டு குழந்தைகளையும் மனுதாரர் வீட்டிலேயே விட்டு விட்டு வெளியே சென்றுள்ளார். மனுதாரரும் அவரது பெற்றோர்களும் எவ்வளவு எடுத்துக் கூறியும் அவர்களை மதிக்காமல் எங்கே செல்கிறேன் என்று கூட தெரிவிக்காமல் சென்றுள்ளார். மனுதாரர் எவ்வித தவறும் செய்யாத

A DAOUDHAMMAL Digitally signed by A DAOUDHAMMAL Date: 2024.03.01 14:39:05 +0530

**சார்பு நீதிபதி, ஆரணி.**

நிலையில் எதிர்மனுதாரர் 24.11.2021 அன்று மனுதாரர் மீது பொய்யான குற்றசாட்டுகளை கூறி ஆரணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு பொய் புகார் அளித்துள்ளார். மேற்படி விசாரணையில் மனுதாரர் குடும்ப நலன் கருதியும் ஒரு இந்து கணவர் என்ற முறையில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவதாக கூறியுள்ளார். அதற்கு எதிர்மனுதாரர் உடன்பட்டு வராமல் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்றும் குழந்தைகளை அழைத்து செல்ல விருப்பமில்லை என்றும் கூறிவிட்டு சென்றுள்ளார். அதன் பின்னர் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது தவறான குற்றசாட்டுகளை கூறி 18.01.2022 அன்று சமூகநலத்துறையிடம் மனு கொடுத்துள்ளார். மேற்படி மனுவின் விசாரணையில் பெண் குழந்தைகள் தந்தையிடம் இருப்பதைவிட தாயிடம் இருப்பது தான் நல்லது என்பதால் குழந்தைகளை அழைத்து செல்லுமாறு கூறினார். ஆனால் அதற்கு எதிர்மனுதாரர் எந்தவித பதிலும் சொல்லிகொள்ளாமல் சமூகநலத்துறை அலுவலகத்திலிருந்து சென்றுள்ளார். மனுதாரர் இரண்டு பெண் குழந்தைகளை எதிர்மனுதாரர் விட்டு சென்ற நாள் முதல் அவர்களை நல்லமுறையில் கவனித்து வந்துள்ளார். மேலும் மனுதாரர் அவரது மனைவியான எதிர்மனுதாரர் நினைவாகவே வாழ்ந்து கொண்டு வருகின்றார். இரண்டு பெண் குழந்தைகளும் அவர்களின் அம்மாவான எதிர்மனுதாரர் அடிக்கடி கேட்டுக்கொண்டு வருகின்றார்கள். இந்து சாஸ்திர முறைப்படி கணவர் எவ்விடத்தில் வாழ்கின்றாறோ அவ்விடத்தில்தான் மனைவியும் வசிக்க வேண்டும் என்பது மரபாகும். ஆனால் எதிர்மனுதாரர் அதற்கு மாறாக நடந்து வருகின்றார். இந்நிலையில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு உண்மை நிலையினை விளக்கி தனது வழக்கறிஞர் மூலம் ஒரு சட்ட அறிவிப்பினை கடந்த 07.02.2022 அன்று அனுப்பி இருந்தார். மேற்படி சட்ட அறிவிப்பினை எதிர்மனுதாரர் வாங்காமல் திருப்பி அனுப்பிவிட்டார். மேற்படி சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டும் கடந்த 24.04.2022 அன்று மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அழைக்கும் பொருட்டு தனது இரண்டு குழந்தைகளை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்று பிரச்சினை இன்றி

A DAOUDHAMMAL

Digitally signed by A DAOUDHAMMAL
Date: 2024.03.01 14:39:24 +0530

**சார்பு நீதிபதி, ஆரணி.**

சேர்ந்து வாழ வருமாறு அழைத்த போது மனுதாரரையும் அவரது குழந்தையையும் பார்க்காமல் 3 மணி நேரத்திற்கும் மேலாக வீட்டிற்கு வெளியே நிற்க வைத்துள்ளார். மனுதாரா் அவரது குழந்தைகளும் வேறு வழியின்றி அவர்களது வீட்டிற்கு வந்துள்ளார்கள். அதன் பிறகு ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பல பஞ்சாயத்து செய்தும், எதிர்மனுதாரா் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே மனுதாரா் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எடுத்த அனைத்து நடவடிக்கைக்கும் எதிர்மனுதாரா் உடன்பட்டு வராத காரணத்தால் வெறு வழியின்றி மனுதாரருக்கும் எதிா்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளாா்.

3. எதிா்மனுதாரா் தரப்பில் எதிருரை தாக்கல்செய்யாததாலும், எதிா்மனுதாரரை அழைத்தும் வருகையின்மையாலும், எதிா்மனுதாரருக்கெதிராக 04.07.2023 அன்று ஒருதலபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 11.08.2023 அன்று மனுதாரா் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டாா். விசாரணையை தொடர்ந்து ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அதன்படி, 17.02.2016 தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1, திருமணத்தின் போது மனுதாரரும், எதிர்மனுதாரரும் எடுத்துக் கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.2, 07.09.2017 தேதியிட்ட நித்திக்ஷா பிறப்பு சான்று நகல் ம.சா.ஆ.3, 09.02.2019 தேதியிட்ட அனுஸ்ரீ பிறப்பு சான்று நகல் ம.சா.ஆ.4, 07.02.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.5, திருப்பப்பட்ட அஞ்சலக உறை ம.சா.ஆ.6, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. எதிா்மனுதாரா் தரப்பில், வழக்கை முன்னிடப்பட்டபோது எதிா்மனுதாரா் அழைத்தும் வருகையின்மையால் எதிா்மனுதாரருக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

A DAOUDHAMMAL Digitally signed by A DAOUDHAMMAL Date: 2024.03.01 14:39:40 +0530

**சார்பு நீதிபதி, ஆரணி.**

5. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் வாதுரையை பரிசீலனை செய்ததில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கும்போது மனுவில் கூறியுள்ள சங்கதிகளையே தெரிவித்து மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் மனுதாரர் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தெரிவித்த சங்கதிகளை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ சான்றாவணங்களோ இல்லை என்பதாலும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் தோன்றா தரப்பினராக உள்ள நிலையிலும், மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியம் இல்லை என்றே முடிவு செய்யப்படுகிறது.

6. முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

1. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இந்து முறைப்படி கடந்த 17.02.2016 அன்று நடந்த திருமணத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

A DAOUDHAMMAL Digitally signed by A DAOUDHAMMAL Date: 2024.03.01 14:40:05 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**சார்பு நீதிபதி, ஆரணி.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 - திரு.கார்த்திகேயன் (மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.02.2016 | தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல் |
| ம.சா.ஆ.2 | - | மனுதாரரும், எதிர்மனுதாரரும் எடுத்துக் கொண்ட புகைப்படம். |
| ம.சா.ஆ.3 | 07.09.2017 | தேதியிட்ட நித்திக்ஷா பிறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 09.02.2019 | தேதியிட்ட அனுஸ்ரீ பிறப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 07.02.2022 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் |
| ம.சா.ஆ.6 | - | திருப்பப்பட்ட அஞ்சல் உறை |
| ம.சா.ஆ.7 | - | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** ஏதுமில்லை.

A DAOUDHAMMAL Digitally signed by A DAOUDHAMMAL Date: 2024.03.01 14:40:21 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**சார்பு நீதிபதி, ஆரணி.**